பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

11 05 2024 6 45

சனிக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. மக்களவைக்கு நான்காவது கட்ட வாக்குப்திவு நடைபெற உள்ள 96 தொகுதிகளில் இன்று மாலையுடன் பிரச்சாரம் நிறைவடைகிறது.

2. விருதுநகரில் உள்ள பட்டாசு ஆலைகளில் மாவட்ட நிர்வாகம் ஆய்வு செய்து 10 நாட்களுக்குள் அறிக்கை அளிக்க வேண்டும் என்று தொழிலாளர் நலத்துறை உத்தரவிட்டுள்ளது.

3. அரசு மற்றும் அரசு உதவி பெறும் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் மாணவர் சேர்க்கைக்கு அடுத்த மாதம் 7ஆம் தேதி வரை விண்ணப்பிக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

4. நீலகிரி, கோவை, தேனி, திண்டுக்கல், விருதுநகர், தென்காசி, திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகிய 8 மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் குஜராத் அணி 35 ரன் வித்தியாசத்தில் சென்னை அணியை வென்றது.

--- இனி விரிவான செய்திகள்---

<<<<>>>>

மக்களவைக்கு நான்காவது கட்ட வாக்குப்திவு நடைபெற உள்ள 96 தொகுதிகளில் இன்று மாலையுடன் பிரச்சாரம் நிறைவடைகிறது.

இந்தத் தொகுதிகளில் அரசியல் கட்சித் தலைவர்கள் கடைசி கட்ட பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளனர்.

ஆந்திரப்பிரதேசத்தில் 25, தெலங்கானாவில் 17, உத்தரப்பிரதேசத்தில் 13, மகாராஷ்டிராவில் 11, மேற்குவங்கம் மற்றும் மத்தியப்பிரதேசத்தில் தலா 8, பீஹாரில் 5, ஜார்கண்ட் மற்றும் ஒடிசாவில் தலா 4, ஜம்மு-கஷ்மீரில் ஒரு தொகுதி என மொத்தம் 96 தொகுதிகளில் நாளை மறுநாள் வாக்குப்பதிவு நடைபெற உள்ளது.

பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு. நரேந்திர மோடி நேற்று தெலங்கானா மாநிலம் ஹைதராபாத் மற்றும் நாராயண்பேட் பகுதிகளில் தீவிரப் பிரச்சாரத்தில் ஈடுபட்டார்.

பிஜேபி மூத்த தலைவர்களில் ஒருவரான திரு. அமித் ஷா, மேற்குவங்கம் மற்றும் ஜார்கண்ட் மாநிலங்களின் பல்வேறு பகுதிகளில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களில் பங்கேற்று உரையாற்றினார்.

எதிர்க்கட்சிகளின் ஒருங்கிணைந்த கூட்டணி சந்தர்ப்பவாத கூட்டணி என்றும், பழங்குடியின மக்களின் நலனுக்காக இந்த அணியில் இடம்பெற்றுள்ள கடசிகள் ஆளும் மாநிலங்களில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும் கூறினார்.

உத்தரப்பிரதேச மாநிலத்தில் சமாஜ்வாதி கட்சித்தலைவர் திரு. அகிலேஷ் யாதவ், காங்கிரஸ் மூத்த தலைவர் திரு. ராகுல் காந்தியுடன் இணைந்து கண்னோஜ், கான்பூர் உட்பட பல்வேறு இடங்களில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களில் உரையாற்றினார்.

பிஜேபி அரசியல் சாசனத்தை மாற்றியமைக்க முயற்சிப்பதாக அவர் குற்றம் சாட்டினார்.

இந்தக் கூட்டத்தில் பேசிய திரு. ராகுல் காந்தி, மத்தியில் எதிர்க்கட்சிகளின் கூட்டணி ஆட்சி அமைந்தால் விவசாயிகள் வறுமையில் இருந்து விடுபடுவத்றகாக அவர்களுக்கு நிதியுதவி அளிக்கப்படும் என்று கூறினார்.

உத்தரப்பிரதேச மாநிலத்தில் எதிர்க்கட்சிகளின் ஒருங்கிணைந்த கூட்டணி வலுவான கூட்டணியாக மாறியுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

<<<<>>>>

விருதுநகரில் உள்ள பட்டாசு ஆலைகளில் மாவட்ட நிர்வாகம் ஆய்வு செய்து 10 நாட்களுக்குள் அறிக்கை அளிக்க வேண்டும் என்று தொழிலாளர் நலத்துறை உத்தரவிட்டுள்ளது.

சிவகாசி அருகே செங்கமலப்பட்டியில் நேற்று முன்தினம் ஏற்பட்ட பட்டாசு ஆலை வெடிவிபத்தில் 10 பேர் உயிரிழந்தனர். 13 பேர் காயமடைந்தனர்.

இந்த விபத்து மட்டுமல்லாமல் சிவகாசி மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் கடந்த சில மாதங்களாக பட்டாசு ஆலை விபத்துகள் அதிகரித்ததை அடுத்து, விதிமீறல்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க மாநில அரசு உத்தரவிட்டுள்ளது.

இந்நிலையில் பட்டாசு தொழிற்சாலைகள் உரிமம் பெற்றுள்ளதா? தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதா?, உரிமம் பெற்ற கட்டிடத்திற்குள் பட்டாசு தயாரிக்காமல் வெளியே பட்டாசு தயாரிக்கப்படுகிறதா என்பது குறித்து மாவட்ட ஆட்சியர் நேரடியாக ஆய்வு செய்து அடுத்த 10 நாட்களுக்குள் அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் என்று தொழிலாளர் நலத்துறை அறிவுறுத்தியுள்ளது.

இந்நிலையில் பட்டாசு ஆலைகளில் அனுமதிக்கப்பட்ட அளவைவிட கூடுதலாக தொழிலாளர்களைப் பயன்படுத்தினால் ஆலை நிர்வாகம் மீது குண்டர் தடுப்புச் சட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுக்கப்படும் என்று விருதுநகர் மாவட்ட நிர்வாகம் எச்சரித்துள்ளது.

<<<<>>>>

நீலகிரி மாவட்டத்திற்கு வெளி மாவட்டங்கள் மற்றும் வெளி மாநிலங்களில் இருந்து வாகனங்களில் வருவோர் இ-பாஸ் கட்டாயம் பெற வேண்டும் என்ற நடைமுறை வந்த பிறகு நேற்று வரை 88 ஆயிரத்து 629 வாகனங்களுக்கு இ-பாஸ் வழங்கப்பட்டுள்ளது.

நேற்று ஏராளமான வாகனங்களுக்கு இ-பாஸ் வழங்கப்பட்டாலும், அவற்றில் நான்கில் ஒரு பங்கிற்கும் குறைவான வாகனங்களே மாவட்டத்திற்குள் வந்ததாக எமது செய்தியாளர் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

அரசு மற்றும் அரசு உதவி பெறும் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் மாணவர் சேர்க்கைக்கு அடுத்த மாதம் 7ஆம் தேதி வரை விண்ணப்பிக்கலாம் என்று வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை இயக்ககம் தெரிவித்துள்ளது.

மாணவர்கள் [www.skilltraining.tn.gov.in](http://www.skilltraining.tn.gov.in) என்ற இணையதளம் வாயிலாக விண்ணப்பிக்கலாம் என்று வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை ஆணையர் தெரிவித்துள்ளார்.

மேலும் மாணவர்களுக்கு உதவிடும் வகையில் மாநிலம் முழுவதும் அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் மாவட்ட திறன்பயிற்சி அலுவலகங்கள் ஆகியவற்றில் 136 சேர்க்கை உதவி மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

8ஆம் வகுப்பு மற்றும் 10ஆம் வகுப்பு தேர்ச்சியடைந்தவர்கள் தொழிற்பயிற்சி நிலையங்களில் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள் என்றும், மதிப்பெண் தரவரிசைப் பட்டியல் வெளியிடப்பட்டு மாணவர்களுக்கு

தற்காலிக ஒதுக்கீட்டு ஆணை இணையதளம் வாயிலாக வெளியிடப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

தெற்கு கேரளா மற்றும் அதனையொட்டிய பகுதிகளின் மேல் வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுவதால் தமிழகத்தின் ஒருசில இடங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இன்று இடி மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

நீலகிரி, கோவை, தேனி, திண்டுக்கல், விருதுநகர், தென்காசி, திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகிய 8 மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும் அந்த மையம் தெரிவித்துள்ளது.

சென்னையைப் பொறுத்தவரை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும், நகரின் ஒருசில பகுதிகளில் லேசானது முதல் மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னையில் அதிகபட்ச வெப்பநிலை 35 டிகிரி முதல் 36 டிகிரி செல்சியசை ஒட்டியும், குறைந்தபட்ச வெப்பநிலை 28 டிகிரி முதல் 29 டிகிரி செல்சியசை ஒட்டியும் இருக்கக்கூடும் என்று வானிலை மையம் கூறியுள்ளது.

இந்நிலையில் நீலகிரி மாவட்டம் பந்தலூர், தேவாலா பகுதிகளில் நேற்றிரவு கொட்டித் தீர்த்த கனமழையால் மக்கள் மகிழ்ச்சியடைந்தனர்.

கடந்த சில நாட்களாக கோடை வெப்பம் அதிகமாக காணப்பட்டதால் புழுக்கத்தில் அவதிப்பட்டு வந்த மக்களுக்கு இந்த மழை நிவாரணம் அளிப்பதாக இருந்தது.

சாகுபடிக்கு மழையை எதிர்பார்த்து காத்திருந்த விவசாயிகளும் கனமழையால் மகிழ்ச்சியடைந்தனர்.

தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டி மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளில் நேற்று மாலை பலத்த காற்று மற்றும் இடி மின்னலுடன் மழை பெய்தது.

திருச்சுழி ஊரணிபட்டியைச் சேர்ந்த ஒருவர் நாலாட்டின்புதூர் பகுதியில் மழைக்காக சாலையோரம் மரத்தடியில் ஒதுங்கியபோது மின்னல் தாக்கி உயிரிழந்தார்.

திருச்சி மாவட்டத்தில் கடந்த 20 நாட்களாக கடுமையான வெப்பம் நிலவி வந்த நிலையில் நேற்று மாலை புறநகர்ப் பகுதியான உறையூர், வயலூர், சோமரசம்பேட்டை உள்ளிட்ட பகுதிகளில் இடியுடன் கூடிய கனமழை பெய்தது.

கரூர் மாவட்டம் குளித்தலை, தண்ணீர்பள்ளி, வதியம், மேட்டுமருதூர் உள்ளிட்ட சுற்றுவட்டாரப் பகுதிகளில் நேற்றிரவு இடி மின்னலுடன் கூடிய கனமழை பெய்தது.

ஒரு மணி நேரத்திற்கும் மேலாக பெய்த மழையால் குளித்தலை நகராட்சிக்கு உட்பட்ட காவிரி நகர் பகுதியில் வாரச்சந்தைக்கு வந்த பொதுமக்களும், நகரின் வாகன ஓட்டிகளும் பெரிதும் பாதிக்கப்பட்டனர்.

இதுபோன்று தொடர்ந்து மழை பெய்தால் மானாவரி விவசாயத்திற்கு பயனுள்ளதாக இருக்கும் என்று விவசாயிகள் தெரிவித்தனர்.

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

பாலஸ்தீனத்திற்கு முழு உறுப்பினர் அந்தஸ்து வழங்கப்பட வேண்டும் என்று ஐ.நா. சபையில் கொண்டுவரப்பட்ட தீர்மானம் இந்தியா உள்ளிட்ட 143 நாடுகளின் ஆதரவுடன் நிறைவேறியது.

-----------

அரசியல் நெருக்கடி காரணமாக குவைத் நாடாளுமன்றத்தை கலைத்து அந்நாட்டு மன்னர் **Sahik Meshal Al Ahmed Al Saba** உத்தரவிட்டுள்ளார்.

-----------

பாலஸ்தீனத்தின் ரஃபா பகுதிக்குள் இஸ்ரேல் படைகள் நுழைந்தால் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கேம்ப் டேவிட் ஒப்பந்தத்தை ரத்து செய்யப்போவதாக எகிப்து, இஸ்ரேலுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.

-----------

சத்தீஸ்கர் மாநிலம் **Bijapur**-ல் பாதுகாப்புப் படையினர் மேற்கொண்ட நடவடிக்கையில் மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் 12 பேர் கொல்லப்பட்டனர்.

-----------

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 12ஆம் வகுப்பில் தேர்ச்சியடைந்த மாணவர்கள் அனைவரும் உயர்கல்விக்கு சென்று தங்களது எதிர்காலத்தை வளமாக்கிக்கொள்ள வேண்டும் என்று மாவட்ட ஆட்சியர் திருமதி சரயு கேட்டுக்கொண்டுள்ளார்.

-----------

தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் சேர்வதற்கு மாணவர்கள் இணையதளம் வாயிலாக விண்ணப்பிக்கலாம் என்று மாவட்ட ஆட்சியர் திரு. லட்சுமிபதி தெரிவித்துள்ளார்.

-----------

தேனி மாவட்டத்தில் உள்ள வீரபாண்டி கௌமாரியம்மன் கோவில் சித்திரைத் திருவிழாவை முன்னிட்டு நேற்று மாலை தேரோட்டம் நடைபெற்றது.

-----------

*விளையாட்டுச் செய்தி*

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் குஜராத் அணி 35 ரன் வித்தியாசத்தில் சென்னை அணியை வென்றது.

அகமதாபாதில் நேற்றிரவு நடைபெற்ற இப்போட்டியில் முதலில் விளையாடிய குஜராத் அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 3 விக்கெட் இழப்புக்கு 231 ரன் எடுத்தது.

அந்த அணியின் சாய் சுதர்ஷன், ஷுப்மன் கில் ஆகியோர் குறைந்த பந்துகளில் சதமடித்தனர்.

132 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் விளையாடிய சென்னை அணி, 8 விக்கெட் இழப்புக்கு 196 ரன் எடுத்தது.

கொல்கத்தாவில் இன்று நடைபெற உள்ள ஆட்டத்தில் மும்பை அணி – கொல்கத்தா அணியை எதிர்கொள்கிறது.

**<<<<The End>>>>**